# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No. 237/2024

dated : 18.11.2025

P.W.1

Name சாகுல் ஹமீது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் கோழிக்கடை நடத்தி வருகிறேன். வட்டிக்கு பணம் கொடுத்து வசூலிக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்துக்கள் ஆதியில் குத்தாலிங்க நாடாருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 17.07.2016 அன்று குத்தாலிங்கம் இறந்துபோனார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அவரது மனைவி அவரும் வழக்கிற்கு பின்னர் இறந்துபோனார் என்றால் சரிதான். மேற்படி குத்தாலிங்க நாடாருக்கு சுதாசங்கரி, பாண்டியரசி, பொற்கலைராணி, ஜமுனாராணி, சுசீலாதேவி என 5 பெண்மக்கள் என்றால் சரிதான். 02.05.2016 அன்று குத்தாலிங்க நாடார் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகலின் ஒளிநகலை நான் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை நான் படித்துப் பார்த்தேன். அந்த ஆவணத்தில் அவரது மனைவி முத்துக்கனி உயிருடன் இருக்கும்வரை வில்லங்கம் செய்யாமல் அனுபவித்து வந்து அவர் இறப்பிற்கு பின்னர்

எந்தெந்த சொத்துக்களை யார் யார் அடைய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 4 வது பட்டியல் சொத்தை 1ம் பிரதிவாதியும், 5 வது பட்டியல் சொத்தை 2ம் பிரதிவாதியும் அனுபவித்துக் கொள்ள வேண்டுமென்று அதில் உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்வரை அவரது அனுமதியில்லாமல் சொத்துக்களை எவரும் கிரையம் செய்து கொடுக்க உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும் முத்துக்கனி உயிருடன் இருக்கும்வரை அவரது அனுமதியில்லாமல் மேற்கொள்ளப்படும் உரிமை மாற்றம் செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு அவர் உயிருடன் இருக்கும்வரை ஆயுள்பாத்திய உரிமையுள்ளது என்ற விவரத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்குரைச் சொத்துக்கள் மத்தளம்பாறை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து தென்காசி- கடையம் சாலையில் சாலையின் முகப்பில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்குரைச் சொத்திற்கு அருகிலேயே ZOHO எனப்படும் கணினி மென்பொருள் நிறுவனம் உள்ளது என்றால் சரியல்ல 2 கி.மீ. தொலைவு தள்ளியுள்ளது. அந்த இடத்தில் தற்போதைய மதிப்பு ஒரு செண்ட் ரூ.63000/- விலை மதிப்பில் உள்ளது. நான் கூறுவது தவறு என்றும் அந்த இடத்தில் தற்போது ரூ.2,00,000/- மேல் மதிப்பு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 03.06.2024 தேதியில் 1, 2 பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டதாக வழக்குரையில் கூறியுள்ளேன் அது பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் என்றால்

சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் 3ம் பிரதிவாதியின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அவருக்கு சொத்தில் உரிமையில்லை என்பதால் அவரிடம் கையொப்பம் பெறவில்லை. நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொள்ளும் முன்பு எழுத்துமூலமான சட்டச் கருத்துரை பெறவில்லை வாய்மொழியாக கேட்டேன். 3ம் பிரதிவாதிக்கு வழக்குரைச் சொத்தில் ஆயுள் கால அனுபவ உரிமை உள்ள நிலையில் அவரது அனுமதியின்றி ஏற்படுத்திக் கொண்டதாக கூறப்படும் கிரைய ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் என்னிடம் ரூ.20,00,000/- கடனாக பெற்றிருந்தார்கள் என்றால் சரியல்ல. ஒருபோதும் சொத்தை கிரையம் கொடுக்கும் எண்ணத்துடன் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. கடன் பெறும்போது நான் 1, 2 பிரதிவாதிகளை நிர்பந்தப்படுத்தி கிரைய ஒப்பந்த ஆவணமாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பெறப்பட்ட ரூ.20,00,000/- க்கு 1, 2 பிரதிவாதிகள் தொடர்ச்சியாக இரண்டு மாதம் வட்டியும் திரும்ப செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஏனென்றால் நான் கொடுத்தது கடனே அல்ல. நான் வட்டிக்கு கடன் கொடுத்தேன் என்பதால்தான் கிரைய ஒப்பந்தம் எனப்படும் ஆவணத்தில் 3ம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. 18.09.2024ம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்குரைச் சொத்துக்களை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுத்த பின்னர் என்னிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்துவதற்காக என்னை அனுகியபோது நான் ரூ. 40,00,000/- தரவேண்டுமென்று

கூறினேன் என்றால் சரியல்ல. அதற்கு பிரதிவாதிகள் மறுத்ததால் ஆவணத்தை உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பமிட்ட நபர்களின் பெயர், முகவரி விவரங்கள் ஏதும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதலாவது சாட்சி இரண்டாம் பிரதிவாதியின் கணவர், இரண்டாவது சாட்சி இராமசாமி என்பவர் நிலத்தரகர். 2ம் பிரதிவாதியின் கணவர் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட மேற்குறிப்பில் 2ம் பிரதிவாதியின் கையொப்பம் மற்றும் கைரேகை உள்ளது. 1ம் பிரதிவாதியின் கையொப்பமோ கைரேகையோ இல்லையென்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் குற்ற வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டதால் 1ம் பிரதிவாதியை சந்தித்து கையொப்பம் பெற இயலவில்லை. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் பணத்தை கொடுத்துவிடும்படி அலைபேசி மூலமாக கூறினார். அதனால் 2ம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்து ஒப்புகை பெறப்பட்டது. இந்த விவரங்களை நான் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் ஜெயராம் என்ற பெயர் உள்ளது. அவர்தான் 2ம் பிரதிவாதியின் கணவர் என்பது பற்றிய விவரங்கள் அதில் காணப்படாது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் ஜெயராம் என்பவரிடம் கொடுத்ததற்கோ அவர் என்னிடம் திரும்ப கொடுத்தார் என்பதற்கோ இணை நிலை ஆவணங்கள் ஏதும் இல்லை. நான் வா.சா.ஆ.3 யை பெயரளவிற்கு உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

கூறுவது போல் காசோலை வழங்கப்பட்டதும் இல்லை திரும்ப பெறப்பட்டதும் இல்லை என்றால் சரியல்ல. 19.06.2024 ம் தேதி ரூ.5,00,000/- கொடுத்ததாக மேற்குறிப்பில் காணப்படுகிறது என்றால் சரிதான். ஜெயராமிடம் ரூ.4,00,000/- கொடுத்ததாக ஒளிநகலில் இறுதிபக்கத்தில் உள்ளது. நான் ரூ.20,00,000/- மட்டுமே பணம் கொடுத்தேன் என்றும் மேற்படி தொகையை கடனாக கொடுத்தேன் என்றும் ஆனால் கூடுதல் மதிப்பாக ரூ.25,00,000/- என்றும் கிரைய ஒப்பந்தம் என்றும் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கடன் ஏதும் கொடுக்கவில்லை. ரூ.2,00,000/-க்கு மேலான தொகையை வங்கி பணபரிமாற்றம் மூலமாகவே மேற்கொள்ள வேண்டும் என்பது எனக்கு தெரியும். நான் மொத்தமாக ரூ.25,00,000/- கொடுக்கவில்லை. பதிவு சட்டப்படி கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் சரிதான். மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கிரைய ஒப்பந்தத்தில் உள்ளது. அதனால் நான் பதிவு செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும் எந்த கிரைய ஒப்பந்தமும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. நான் எந்தெந்த தேதியில் பிரதிவாதிகளை கிரையம் எழுதித்தரும்படி கேட்டேன் என்று குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். நான் வழக்குரையில் பிராது சொத்துக்களை என் பெயரில் கிரையம் முடித்துக் கொள்ள விருப்பத்துடனும், தயாராகவும் இருந்து வருவதாக கூறவில்லை என்றால் சரியல்ல. 02.09.2024 க்கு முன்பு கிரையத்தை முடித்துக் கொள்ள பிரதிவாதிகளுக்கு அழைப்பு விடுத்து அறிவிப்பு ஏதும்

அனுப்பவில்லை என்றால் சரிதான் நேரில் கேட்டேன். கிரைய பாக்கித் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட விவரம் 4ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளிடமிருந்து 18.09.2024ம் தேதி சார் பதிவாளர் அலுவலக கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1 மற்றும் 3 தபசில் சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகளிடமிருந்து அதே தேதியில் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் கிரையம் நல்லெண்ணத்துடன் கூடிய கிரையம் என்றால் சரியல்ல மோசடி கிரையம் ஆகும். 4ம் பிரதிவாதி முறையாக விசாரணை செய்து வில்லங்க சான்று பெற்று பார்த்து வில்லங்கம் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே 1, 2 பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்து தற்போது 4ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி பெயரில் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் வழக்கிற்கு பின்னர் அவ்வாறு செய்துள்ளார். எனக்கும் 4ம்பிரதிவாதிக்குமிடையே ஒப்பந்தம் ஏதும் இல்லை. நான் இடைக்கால மனுவில் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் அதில் 4ம் பிரதிவாதி வில்லங்கம், விற்பனை செய்யக்கூடாதென பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் ஏதும் இல்லாத நிலையில் அவ்வாறு உறுத்துக்கட்டளை பரிகாரம் ஏதும் கோர இயலாது என்றால் சரியல்ல. ரூ.20,00,000/- கடன் மற்றும் வட்டித் தொகையை

பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவது தவறு என்றும் வைப்பீடு செய்யும்போதே எங்கள் தரப்பிற்கு அறிவிப்பு கொடுத்த பின்னரே முன் பணத்தொகை மீண்டும் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த தொகையை திரும்ப பெற்றுக் கொண்டு வழக்குரைச் சொத்துக்களின் அசல் ஆவணங்களை திரும்ப கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் ஏற்றதை ஆற்றக்கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கததக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.18 17:11:16 +0530